

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 05-06-2023


# துயரம் துயரம் துயரம்!

இந்தியாவில் இதுவரை நடந்திராத கோரமான ரயில் விபத்தாக ஒடிசா ரயில் விபத்து அடையாளப்படுத்தப்படுகிறது. இந்த துயரமான கோரமான சம்பவத்துக்கு பொறுப்பேற்கப் போவது யார் என்று தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா கேள்வி எழுப்பி இருக்கிறார்கள். இது அனைவர் மனதிலும் உள்ள கேள்வி ஆகும்.

1956 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் அரியலூரில் நடந்த ரயில் விபத்தில் 142 பேர் இறந்து போனார்கள். இதற்கு பொறுப்பேற்று அன்றைய ரயில்வே அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி பதவி விலகினார். 1999 ஆம் ஆண்டில் காய்சால் ரயில் விபத்தில் 290 பேர் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து அன்றைய ரயில்வே அமைச்சர் நிதிஷ்குமார் பதவி விலகினார். 2000 ஆம் ஆண்டில் நடந்த இரண்டு ரயில் விபத்துகளுக்கு பொறுப்பேற்று தனது பதவி விலகல் கடிதத்தை அன்றைய ரயில்வே அமைச்சர் மம்தா பானர்ஜி, அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் கொடுத்தார். ஆனால் அதனை பிரதமர் வாஜ்பாய் ஏற்க மறுத்தார். 2017 ஆம் ஆண்டு கலிங்கா உத்கல் எக்ஸ்பிரஸ் ரயில் விபத்தில் 22 பேர் உயிரிழந்தனர். இதற்கு பொறுப்பேற்று அன்றைய ரயில்வே அமைச்சர் சுரேஷ் பிரபு பதவி விலகினார். அது போல் முதல் கட்டமாக இன்றைய ரயில்வே அமைச்சர் பொறுப்பேற்க வேண்டும். ஆனால் யார் துறையிலோ நடந்ததைப் போல இருக்கிறார் இன்றைய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ்.

**மூன்று ரயில்கள் அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளானதற்குக் காரணம், தவறான சிக்னல் தரப்பட்டதே என்ற தகவல் வெளியாகி இருக்கிறது. சென்னை நோக்கி வந்து கொண்டிருந்த கோரமண்டல் ரயிலுக்கு பச்சை சிக்னல் கொடுத்துவிட்டு உடனடியாக அதை ரத்து செய்ததால் இந்த விபரீதம் நடந்துள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளது.**

“இந்த நூற்றாண்டின் மிக மோசமான ரயில் விபத்து இது. ரயில்வே துறையில் ஒருங்கிணைப்பு இல்லை, விபத்து தடுப்புக் கருவிகள் முறையாகப் பொருத்தப்படாததால்தான் இவ்வளவு பெரிய விபத்து ஏற்பட்டிருக்கிறது” என்று ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவை அருகில் வைத்துக் கொண்டே சொல்லி இருக்கிறார் மேற்கு வங்க மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி அவர்கள்.

“இந்திய ரயில்வே துறையையே அழித்துவிட்டார்கள். மிகப்பெரிய அலட்சியமே ஒடிசா ரயில் விபத்துக்கு காரணம்” என்று முன்னாள் ரயில்வே துறை அமைச்சர் லாலு பிரசாத் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

**விபத்து நடந்த பாலசோர் வழித்தடத்தில், ஓட்டுநரின் கவனக் குறைவால் விபத்து ஏற்படாமல் தடுக்கும் ‘கவாச்’ ( kavach)என்ற பாதுகாப்பு அம்சம் அமைக்கப்படவில்லை என்று ரயில்வே செய்தி தொடர்பாளர் அமிதாப் ஷர்மா தெரிவித்திருக்கிறார். விபத்து ஏற்படும் சூழல் வந்தால் ரயிலை தானாகவே நிறுத்திவிடுவது தான் ‘கவாச்’ அம்சம் ஆகும். ‘Kavach’ என்பது தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பு (ATP Automatic Train Protection) ஆகும். இது அமைக்கப்படவில்லை. சிக்னல் தவறாகக் காட்டி இருந்தால் இந்தக் கருவி அரைகிலோ மீட்டருக்கு முன்பே ஆட்டோ மேட்டிக்கான ரயிலை நிறுத்திவிடும். இந்தியாவில் பெரும்பாலான ரயில் பாதைகளில் இந்த வசதி இது வரை இல்லை. ஒன்பது ஆண்டு கால மோடி சர்க்காரின் சாதனை இது. 2022 ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் ஆத்ம நிர்பர் பாரத் திட்டத்தின் கீழ் இந்த பாதுகாப்பு அமைப்பு உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் அமைக்கவில்லை.**

6 ட்ராக்குகள் இருக்கும் வழித்தடத்தில் 3 ரயில்கள் ஒரே நேரத்தில் மோதி விபத்து நடந்துள்ளது. ‘கவாச்’ பொருத்தப்பட்டு இருந்தால் இது நடந்திருக்க வாய்ப்பே இல்லை. அரவிந்தன் என்ற பதிவர் முகநூலில் இது குறித்து எழுதி உள்ளார். “இந்திய ரயில் வேத்துறையின் அங்கமான Research and standards organisation (RDSO) மூன்று தனியார்களுடன் இணைந்து ஓடும் ரயில்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக National Automatic Train Protection என்ற தானியங்கி தொழில்நுட்பத்தை உருவாக்கியது. அதற்கு KAVACH என்றும் பெயரிட்டார்கள். 23.03. 2022 ம் தேதியன்று நாடாளுமன்றத்தில், ரயில்வேதுறை மற்றும் Kavach தொழில்நுட்பம் தொடர்பான கேள்விக்கு அமைச்சர் அஸ்வினி வைஷ்னவ் பதில் அளித்திருந்தார்.

Kavach தொழில்நுட்பம் தொடர்பான இறுதி திருத்தங்கள் செய்யப்பட்ட தேதி 18.01.2022. அதன்படி, தொழில்நுட்ப ரீதியான சோதனை ஓட்டம் நடத்தப்பட்ட தேதி 14.03.2022. அதனை நடை முறைப்படுத்தவில்லை.

1957-ம் ஆண்டில் இருந்து இயங்கி வரும் அமைப்புதான் Research and standards organisation (RDSO) நிறுவனம்.

Train collision avoidance system (TCAS) குறித்து 2012-ல் இருந்து ஆய்வுகளை மேற்கொண்டு தொழில்நுட்பத்தை வழங்கி வருகிறது. ஆனால்,தனியார் பங்களிப்புடன் இணைந்து National Automatic Train Protection (ATP) என்ற தானியங்கி தொழில்நுட்பமாக மேம்படுத்தினார்கள். ஒடிசாவில் நடந்துள்ள விபத்து “கவாச்” தொழில்நுட்பம் குறித்த கேள்வியை எழுப்பியுள்ளது” என்று எழுதி இருக்கிறார்.

**இந்திய ரயில்வேயின் மொத்த பாதைகளின் நீளம் 68 ஆயிரத்து 43 கிலோ மீட்டர் என்றும், இதில் ஆயிரத்து 445 கிலோ மீட்டர் தூரம் மட்டுமே இந்த கவாச் வசதி உள்ளது என்றும் சொல்லப்படுகிறது. அதாவது 2 சதவிகித பாதையில் மட்டுமே இந்த வசதி உள்ளது. இந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் 2.40 லட்சம் கோடியை ஒதுக்கினார்கள். பிரதமர் கதிசக்தி திட்டத்தில் ரயில்வே முக்கியத் துறை என்று முழங்கினார்கள். ஆனால் அப்பாவி மக்களை நிர்மூலம் ஆக்கிவிட்டார்கள். பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்து விட்டோம் என்றார்கள். என்ன உறுதி செய்திருக்கிறார்கள் என்பதை ஒரிசா ஒரு சம்பவம் சொல்லி விட்டது. ரயில்வே துறை எப்படி இருக்கிறது பா.ஜ.க. ஆட்சியில் என்பதற்கு ரத்த சாட்சியம் 280க்கும் மேற்பட்ட உயிர்கள். துயரம்... துயரம்... துயரம்...**

## கோரமண்டல் ரயில் கோர விபத்து: அதிகாரிகளுடன்

# ஒடிசாவில் 2வது நாளாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனை!

## மருத்துவமனைக்குச் சென்று பாதிக்கப்பட்டோரிடம் நலம் விசாரித்தார்!

**புவனேஸ்வர், ஜூன் 5-**

**ஒடிசாவில் 2வது நாளாக தங்கி இருந்து அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், எஸ்.எஸ். சிவசங்கர், அதிகாரிகள் கொண்ட தமிழ்நாடு குழு ஒடிசா மாநில அதிகாரிகளுடன் மீட்புப் பணிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் முறை குறித்து ஆலோசனை மேற்கொண்டனர்.**

**பாலசோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் பயணிகளிடம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் நலம் விசாரித்து உரிய சிகிச்சை அளித்திட மருத்துவர்களிடம் வலியுறுத்தினார்.**

இதுபற்றிய விபரம் வருமாறு:-

ஒடிசா மாநில ரயில் விபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களை மீட்பது, நிவாரணப் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி, அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், எஸ்.எஸ்.சிவசங்கர் மற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அடங்கிய குழுவினர் ஒடிசாவுக்கு நேற்று முன்தினம் (3.6.2023) சென்றனர்.

### ஒடிசா அதிகாரிகளுடன் ஆலோசனை!

இரண்டாவது நாளாக நேற்று (4.6.2023) ஒடிசாவில் தங்கியிருந்து அம்மாநில அதிகாரிகளுடன் இணைந்த அக்குழுவினர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர்.

மேலும் பல்வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், எஸ்.எஸ்.சிவசங்கர் மற்றும் தமிழ்நாட்டு அதிகாரிகள் சந்தித்து ஆறுதல் கூறினர்.

### முன்பதிவு செய்யாத பெட்டியில் பயணம் செய்தவர்கள் நிலை!

இந்நிலையில் கோரமண்டல ரயிலில் முன்பதிவு செய்யாத பெட்டியில் பயணம் செய்த 12 பேர் நிலை குறித்து அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், சிவசங்கர் மற்றும் தமிழ்நாட்டின் அதிகாரிகள் கொண்ட குழுவினர் ஒடிசா அதிகாரிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டனர்.

உறவினர்கள், உட்பட யாரையும் தொடர்பு கொள்ள முடியாத நிலையில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 பேரில் 4 பேர் உயிருடன் இருப்பதாக குழுவில் இடம் பெற்றுள்ள அதிகாரிகள் கூறினர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீதமுள்ள 8 பேர் தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளதால் அவர்களை கண்டறியும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், எஸ்.எஸ். சிவசங்கர் மற்றும் அதிகாரிகள் நேற்று ஒடிசாவின் பாலசோர், ஃபக்கீர்மோகன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் பயணிகளிடம் நலம் விசாரித்தனர். அப்போது உரிய சிகிச்சை வழங்கிடுமாறு பாலசோர் மருத்துவமனை மருத்துவர்களிடம் அமைச்சர்கள் வலியுறுத்தினர்.

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி.. முதல் பக்கத் தொடர்ச்சி

நாங்கள் அங்கு மருத்துவமனைக்குச் சென்று கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் மருத்துவமனையில் இருந்தோம். உங்களுடைய பத்திரிகை நிருபர்களுடைய நண்பர்களும் அங்கு வந்திருந்தார்கள். அவர்களுக்கே தெரிந்திருக்கும், அங்கு யாரும் தமிழர்களே இல்லை. நாங்களே ஒவ்வொரு தளமாகச் சென்று பாதிக்கப்பட்டவர்களையெல்லாம் பார்த்தோம். அதற்குப் பிறகு சடலங்கள் எல்லாம் வைக்கப்பட்டிருந்த இடத்திற்குச் சென்று பார்த்தோம். வேதனையான ஒரு அனுபவம் தான்.

**கேள்வி:** *நேற்று விமானம் மூலமாக 6 நபர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் அங்கு உங்களைத் தொடர்பு கொள்ள முடியாமல் இங்கு வந்திருக்கிறார்கள், ஏன் உங்களைத் தொடர்பு கொள்ள முடியவில்லை?*

**அமைச்சர்:** ஒடிசா அரசுதான் அவர்களை அங்கிருந்து பேருந்தின் மூலமாக புவனேஸ்வருக்கு கொண்டு போய் விட்டார்கள். நாங்கள் விபத்து நடந்த இடத்திற்கு அருகிலுள்ள மருத்துவனைக்குச் செல்வதற்கு 1 மணி ஆகிவிட்டது. அவர்கள் நேற்று அதிகாலையிலே புறப்பட்டு விமானத்தின் மூலமாக பாதுகாப்பாக வந்துவிட்டார்கள். நாங்கள் அவர்களை trace செய்வதற்குத்தான் முயற்சி செய்து கொண்டிருந்தோம்.

**கேள்வி:** *21 மருத்துவமனைகளில் பாதிக்கப்பட்டவர்களை வைத்திருக்கிறார்கள், அந்தக் கட்டமைப்பைப் பாத்திருக்கிறீர்கள், தமிழ்நாடு கட்டமைப்புகளும் இருக்கிறது, உங்களால் அதை ஒப்பிட முடிகிறதா?*

**அமைச்சர்:** இது அதற்கான நேரம் இல்லை.

**கேள்வி:** *தமிழகத்தைச் சேர்ந்த ஒரு வீரர், அவர் இந்திய அரசைத் தொடர்பு கொண்டு மிகப்பெரிய அளவில் அவர் பங்காற்றியிருக்கிறார், அது குறித்து....*

### மீட்புப் பணியில் உதவிய அனைவருக்கும் நன்றி!

**அமைச்சர்:** அவருக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த ஊரைச் சேர்ந்த மக்கள் பலர் தொடர்ந்து இரண்டு நாட்களாக இந்த மீட்புப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒட்டுமொத்த மக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கேள்வி:** *ஒரு மணிக்கு அங்கிருந்து இரயில் புறப்பட்டிருக்கிறது, அதில் யார் யார் ஏறியிருக்கிறார்கள் என்பது குறித்த தகவல் இருக்கிறதா?*

**அமைச்சர்:** அதிலும் மூன்று, நான்கு பேர் வருவதாகக் கேள்விப்பட்டோம். வந்தால்தான் தெரியும்.

**கேள்வி:** *ஒடிசா முதல்வர் நம் மாநிலத்திலிருந்து ஏதாவது உதவி கேட்டிருக்கிறாரா?*

**அமைச்சர்:** அதுபோன்று எதுவும் கேட்கவில்லை. ஆனால் நாங்கள், எந்தவிதமான உதவியானாலும் சொல்லுங்கள், செய்கிறோம் என்று கூறிவிட்டு வந்திருக்கிறோம்.

**கேள்வி:** *மூன்று மாதத்திற்கு முன்பே இதுபோன்ற தவறு நடந்திருக்கிறது, தொடர்ந்து இதுபோன்று நடக்கிறது? நீங்கள் என்ன கோரிக்கை வைக்கிறீர்கள்?*

**அமைச்சர்:** எங்களுடைய துணைப் பொதுச் செயலாளர் நேற்று பத்திரிகையாளர்களைச் சந்தித்து தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு யாராவது பொறுப்பு ஏற்க வேண்டும். என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள், யார் மேல் என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதை பார்த்துவிட்டு எங்கள் தலைவர் முடிவெடுப்பார்.

*இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.*

## சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி ஏரியில் அதிகாரிகள் ஆய்வு!

ஊத்துக்கோட்டை, ஜூன் 5 -

பூண்டி ஏரியின் உயரம் 35 அடியாகும். இதில் 3.231 டி. எம்.சி. தண்ணீரை சேர்த்து வைக்கலாம். கோடை காலங்களில் வெயில் காரணமாக இந்த ஏரி முழுவதுமாக வறண்டு விடும்போது சென்னையில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு பூண்டி ஏரியில் கூடுதல் தண்ணீர் சேமிக்க தமிழக அரசு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமை செயலாளர் சிவதாஸ் மீனா நேற்று மாலை பூண்டி ஏரியை பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது நீர் தேக்கங்கள் மற்றும் ஏரிகளில் உள்ள ஆகாயத் தாமரை, பிற நீர்த்தாவரங்கள் மற்றும் இதர கழிவுப் பொருள்களை வரும் பருவ மழைக்கு முன்பாக அகற்ற வேண்டும். மேலும், இணைப்பு கால்வாயின் இருபுறமும் சேதம் அடைந்துள்ள சாய்வு தளங்களை பராமரிப்பு செய்து கால்வாயின் இரு புறமும் குடியிருக்கும் மக்கள் கால்வாயில் குப்பை மற்றும் கழிவுகளை கொட்டாமல் தகவல் பலகைகள் வைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தி கண்காணிக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கி னார்.




“கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் ஏழைகளுக்காகப் பாடுபட்டவர். ஏழை இஸ்லாமியர்களுடைய இதயங்களிலே இடம் பெற்றவர்.” – முத்தமிழறிஞர் கலைஞர்

கண்ணியத்திற்குரிய
காயிதே மில்லத் அவர்களின்
128ஆவது பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில்
சென்னை, திருவல்லிக்கேணி வாலாஜா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில்
அமைந்துள்ள அன்னாரது துயிலிடத்தின் மீது

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
மலர்ப் போர்வை அணிவித்து மரியாதை செலுத்துவார்கள்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் பங்கேற்பார்கள்.

நாள் : 5.6.2023 திங்கட்கிழமை, காலை 10.00 மணி

இயக்குநர்,
செய்தி – மக்கள் தொடர்புத்துறை,
சென்னை – 600 009

செ.ம.தொ.இ/596/வரைகலை/2023

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in